நாள்.27.01.2025

**அசல் வழக்கு எண். 109/2022**
**பெயர்.கிறிஸ்டின் பால்ராஜ்**

**த.பெ. ஆரோக்கியசாமி**

**பி.வா.சா.1– வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

அந்தோணி உடையார் என் தாத்தா பூசமுத்துவின் தந்தை. அந்தோணி உடையாருக்கு சௌரிமுத்து , சூசைமுத்து வாரிசுகள் என்றால் சரிதான். சௌரிமுத்துவின் மகன் சேவியர். சூசைமுத்துவிற்கு எனது தந்தை ஆரோக்கியசாமி மற்றும் மைக்கேல் வாரிசுகள் என்றால் ஆமாம். எனது தந்தை ஆரோக்கியசாமிக்கு நான் மற்றும் வாதி வின்செனட் சவேரியார் வாரிசுகள் என்றால் ஆமாம். 2ம் எதிர்வாதி எனது மனைவி. வழக்கு சர்வே எண்.431/3பி – 7 ஏர்ஸ் என்றால் சரிதான். வாதி எனது அண்ணன் வழக்கு தொடர்வதற்கு முன்பாகவே 05.06.2021ம் தேதி நான் எனது வழக்கறிஞர் மூலம் அறிவிப்பு அனுப்பியுள்ளேன் என்றால் ஆமாம். அதற்கு எனது அண்ணன் 06.07.2021ல் பதில் அறிவிப்பு அனுப்பியுள்ளார் என்றால் ஆமாம். அதில் என்ன விபரம் சொல்லப்பட்டுள்ளது என்று தெரியுமா என்றால் தெரியும். அதன்பிறகு நான் எனது அண்ணன் மீது வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் ஆமாம். நான் 8ம் வகுப்பு படித்துள்ளேன். எழுதபடிக்க தெரியும். பி.வா.சா.ஆ.3–ல் அறிவிப்பில் உள்ள சொத்துவிபரம்தான் இந்த வழக்கில் உள்ளது என்றால் ஆமாம். வழக்கு சொத்து எனது தந்தை ஆரோக்கியசாமி அவர்களால் முருகன், மலையப்பன், குணசேகரன் ஆகியோர்களிடம் கிரைய ஆவணம் எழுதி பதிவு செய்துகொள்ளாமல் அனுபவம் மட்டும் எனது தந்தை ஆரோக்கியசாமி வசம் உள்ளதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் ஆமாம். அந்த கிரைய ஆவணம் எங்கே உள்ளது என்றால் எனக்கு தெரியாது. நான் வழக்கறிஞர் அறிவிப்பில் இந்த ஆவணம் எனது தந்தையிடம் இருந்தது என்னிடம் கொடுக்கவில்லை என்ற விபரத்தை சொல்லவில்லை என்றால் ஆமாம். என் அண்ணன் தாக்கல் செய்துள்ள வழக்குரைக்கு நான் எதிர் வழக்குரை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அந்த எதிர்வழக்குரை விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். எதிர்வழக்குரையில் நான் பரிவர்த்தனை மூலம் எனது தந்தைக்கு கிடைத்த சொத்து என்று சொல்லியுள்ளேன் என்றால் ஆமாம். நிருபணவாக்குமூலத்தில் எது உண்மை என்ற விபரம் சொல்லவில்லை என்றால் ஆமாம். எதிர்வழக்குரை பாரா 5ல் எனது குடும்பத்திற்கு சொந்தமான சுடுகாடு உள்ள இடத்தில் பரிவர்த்தனை செய்துகொடுத்து எனது தந்தை முருகன், மலையப்பன், குணசேகரன் ஆகியோர்களிடம் வழக்கு சொத்தை

வாங்கியதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் ஆமாம். எங்களுக்கு சொந்தமான சுடுகாடு என்ற இடத்தின் சர்வே எண் தெரியுமா என்றால் தெரியாது. விஸ்திரணம் தெரியுமா என்றால் 1 ஏக்கர் இருக்கும். சரியான அளவு தெரியாது. பட்டா எண் தெரியுமா என்றால் தெரியாது. எனது தந்தை வழக்கு சொத்தை கிரையம் வாங்கவில்லை, பரிவர்த்தனையும் வாங்கவில்லை என்றால் தவறு. கிரையம் அல்லது பரிவர்த்தனை மூலம் பெற்றதற்கோ ஆவணம் ஏதும் உள்ளதா என்றால் இல்லை. எனது தந்தைக்கோ, எனக்கோ வழக்கு சொத்தில் எந்த பாத்தியமும், அனுபவமும், உரிமையும் கிடையாது என்றால் அனுபவித்துவருபதற்கு ஆவணம் தாக்கல் செய்துள்ளேன். அதுபோல் எந்த ஆவணமும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. 2004ம் ஆண்டு நான், வாதி குடும்ப சொத்துக்களை வாய்மொழியாக பாகப்பிரிவினை செய்துக்கொண்டோம் என்றால் சரிதான். அப்போது எனது தந்தை இருந்தார் என்றால் சரிதான். வழக்கு சொத்து 26.08.2010ம் தேதி வாதியால் அதன் உரிமையாளரிடமிருந்து சரியான பிரதிபிரயோஜனத்திற்கு பதிவான கிரைய பத்திரம் மூலம் கிரயம் வாங்கியுள்ளார் என்றால் தவறு. அந்த கிரையத்தின் அடிப்படையில் வழக்கு சொத்திற்கு பட்டா, சிட்டா, அடங்கல் வாதி பெயரில் வந்துள்ளது என்றால் மூத்தவர் என்ற அடிப்படையில் வந்துள்ளது. நான் சொல்வது தவறு என்றால் இல்லை. எனது குடும்பத்தில 2004 வாய்மொழி பாகப்பிரிவினைக்கு பிறகு 2010ல் வழக்கு சொத்து வாதியால் கிரையம் வாங்கப்பட்டது என்றால் தவறு. வாதி அவருக்கு சொந்த பணம் மற்றும் அவர் மனைவியின் நகைகளை விற்கு அந்த பணத்தைக்கொண்டு வழக்கு சொத்தை கிரையம் வாங்கியுள்ளார் என்றால் அது பொய். மேற்படி கிரைய தேதி முதல் நாளது தேதிவரை வழக்கு சொத்தில் வாதியின் சுவாதினத்திலும், அனுபவத்திலும் இருந்துவருகிறது என்றால் இல்லை நான் தான் அனுபவம் செய்துவருகிறேன். வழக்கு சொத்தில் எனக்கு உரிமை இல்லை என்றும் அனுபவம் இல்லை என்றால் தவறு. எனது அண்ணன் வாதிதான் வழக்கு சொத்தை வாய்மொழியாக பிரித்துக்கொடுத்தார். வழக்கு சொத்து வாய்மொழி பாகப்பிரிவினைக்கு பிறகு 6 வருடம் கழித்து வாதியால் வாங்கப்பட்டது என்றால் எனக்கு அதுப்பற்றி தெரியாது. எனது அனுபவத்தில்தான் இருந்தது. வழக்கு சொத்து வாதியின் தனிப்பட்ட சொத்து என்றால் இல்லை. வழக்கு சொத்து வாதியின் பெயரில் கிரையம் செய்யப்பட்ட நிலையில் அந்த கிரைய பத்திரம் செல்லாது என நான் வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் வழக்கு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வருவாய்துறைக்கு சென்று VAOவிடம் கேட்டேனா என்றால் கேட்டேன் எனது அண்ணன் பெயரில்

உள்ளதாக சொன்னார். வழக்கு சொத்திற்குண்டான சிட்டா, அடங்கல் ஆவணங்களை வருவாய் துறை வாட்டாட்சியரிடம் வாங்க முயற்சி செய்தேனா என்றால் எனக்கு அதுப்பற்றி தெரியாது. எனக்கு வழக்கு சொத்து பற்றி தெரியும் நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் இல்லை. 2022ல் வாதி வழக்கு தாக்கல் செய்துள்ளார். 3வருடம் ஆகிவிட்டது என்றால் சரிதான். தற்போது கூட பட்டா, சிட்டா ஆவணங்களை நான் முயற்சி செய்தேனா என்றால் இல்லை. எனது வழக்கறிஞர் மூலம் நான் விபரத்தை தெரிந்துக்கொள்ளவில்லை என்றால் ஆமாம். வாதி 2022ல் வழக்கு தாக்கல் செய்தபிறகு எனக்கு சம்மன், நோட்டிஸ் வந்துள்ளது அதை நான் வாங்கி படித்துபார்த்தேனா என்றால் இல்லை. நேராக வழக்கறிஞரை பார்க்க சென்றுவிட்டேன். பி.வா.சா.ஆ.1 ஆவணம் எதற்காக தாக்கல் செய்துள்ளேன் என்றால் எனக்கு தெரியாது வழக்கறிஞருக்குதான் தெரியும். பி.வா.சா.ஆ.2 27.05.2013ல் சேவியரால், வாதிக்கு எழுதிக்கொடுத்த பாகப்பாத்திய விடுதலை பத்திரம் தாக்கல் செய்துள்ளேன் அதில் வழக்கு சொத்தின் சர்வே எண் இல்லை என்றால் ஆமாம். பி.வா.சா.ஆ.1 என்பது சேவியரால் எனக்கு எழுதிக்கொடுக்கப்பட்ட பாகப்பாத்திய விடுதலை பத்திரம் என்றால் சரில் அதில் வழக்கு சொத்தின் சர்வே எண் இல்லை என்றால் ஆமாம். நீதிமன்றத்தில் 3 ஆவணம் மட்டும்தான் தாக்கல் செய்துள்ளேன். மேற்படி 3 ஆவணங்களும் இந்த வழக்கிற்கு சம்பந்தம் இல்லை என்றால் ஆமாம். வழக்கு புல எண் சம்பந்தமாக எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் ஆமாம். பரிவர்த்தனை செய்ததால் எனது தந்தை எந்த ஆவணமும் செய்யவில்லை. பரிவர்த்தனையே நடக்கவில்லை நான் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் இல்லை. வழக்கு சொத்திற்கு தென்புறம் உள்ள சர்வே எண் 431/4 என்றால் சரிதான். அது யாருக்கு சொத்மான சொத்து என்றால் என்னுடைய சொத்து. அந்த சொத்து எப்படி கிடைத்தது என்றால் பரிவர்த்தனை மூலம் கிடைத்தது. அதை எனக்கு எனது தந்தை பத்திரம் எழுதிக்கொடுத்துள்ளார். என்ன பத்திரம் என்றால் பரிவர்த்தனை பத்திரம். எந்த வருடம் என்றால் தெரியாது. மேற்படி சொத்து எனது தந்தை பரிவர்த்தனை மூலம் பெறவில்லை நான் பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. சர்வே எண் 431/4 என்னிடம் காட்டப்படும் கிரைய பத்திரம் 30.07.2002ல் எனது தந்தையால் கிரையம் வாங்கப்பட்ட சொத்து என்றால் சரிதான். எனக்கு அதுப்பற்றி தெரியாது. ஆனால் தற்போது கிரைய பத்திரம் என்று நீதிமன்றத்தில் தெரிந்துக்கொண்டேன். **அந்த கிரைய பத்திரம் வா.சா.ஆ.11 ஆக குறியிடப்படுகிறது.** எனது தந்தை கிரையம் வாங்கி விபரம் எனக்கு தெரியும் நான் பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இந்த

கிரைய பத்திரம் 2002ல் கிரையம் வாங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். எங்கள் குடும்பத்தில் வாய்மொழி பாகப்பிரிவினை 2004ல் ஏற்பட்டது என்றால் சரிதான். 25.09.2013ல் வாதியும், எனது தாயார் அருளாயி என்பவரும் எனக்கு வா.சா.ஆ11 சொத்தை பொறுத்து ஒரு பாகப்பாத்திய விடுதலை பத்திரம் எழுதிக்கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான். எனக்கு அனைத்து விபரமும் தெரியும் நான் தெரியாது போல் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் தவறு. என்னிடம் காட்டப்படும் பத்திரம் தான் வாதியும், எனது தாயாரும் எழுதிக்கொடுத்த ஆவணம் நகல் என்றால் சரிதான். அதன் அசல் என்னிடம் தான் உள்ளது. அது **வா.சா.ஆ.12 ஆக குறியிடப்படுகிறது.**

<u>**வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின்படி குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**</u>

*Taken down by the typist to my dictation*
*in open Court read over to the*
*witness admitted and acknowledged*
***by him/her to be Correct.***

Tmt.S.Kavipriya,B.A.,L.L.B.,

District Munsif, Pattukkottai.